# பழைய ஏற்பாட்டை சுவிசேஷ புத்தகங்களோடு தொடர்புபடுத்துதல் - பாகம் ஒன்று

# CONNECTING THE OLD TESTAMENT TO THE GOSPELS - PART ONE

**அறிமுகம்**

முந்தைய பாடங்களின் சுருக்கமான விவரத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவலுக்கும், சுவிசேஷ புத்தகங்களில் இயேசு இஸ்ரவேலருக்கு செய்த போதனைக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்துவது இப்பாடத்தின் நோக்கமாகும். மோசேயைப் போன்ற தேவனுடைய தீர்க்கதரிசியாக இயேசு இஸ்ரவேலருக்கு ஊழியம் செய்தார். *அப்போஸ்தலர் 3:22,23.* ஏனென்றால், நசரேயனாகிய இயேசு தான் “கிறிஸ்துவாக” இருக்கின்றார். சுவிசேஷ புத்தகங்களில் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளும் காரியம், பின்னொரு நாளில் சபைக்காக எழுதப்பட்டதாகும். அவருடைய போதனைகள் அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்திலும் அதன் பிறகும் அப்போஸ்தலருடைய சுவிசேஷமாக மாறியது. இயேசு கிறிஸ்து இப்பொழுது தமது ராஜ்யத்தில் தமது பிதாவுக்காக சபையை கட்டிக்கொண்டிருக்கின்றார். *மத்தேயு 16:13-19.* கிறிஸ்தவர்களுடைய விசுவாசமானது தேவனுடைய வல்லமையை தூண்டுவதாக அமைந்துள்ளது. “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.” *கொலோசெயர் 1:13,14.*

**பாடம்**

நான்கு சுவிசேஷ புத்தகங்களில் தேவன் தெரிவிக்கின்ற விவரமானது லேவிய ஆசாரியத்துவ முறைமையின் காலத்தை சார்ந்தது.





இயேசு கிறிஸ்துவுக்கு வழியை ஆயத்தம்பண்ணும்படியாக யோவான்ஸ்நானனை தேவன் அனுப்பினார். *மத்தேயு 11:10-14.* சுவிசேஷ புத்தகங்களில் குறிக்கப்பட்டுள்ள கால வரம்பில் இயேசு கிறிஸ்து ராஜாவாகவும், ஆசாரியராகவும் தமது பணியை அதிகாரபூர்வமாக செய்யவில்லை. அவர் மாம்சத்துக்குரிய இஸ்ரவேலுக்கு தேவனுடைய கடைசி தீர்க்கதரிசியாகவும், தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பிரசங்கிப்பவராகவும் தமது பணியை செய்தார். *மத்தேயு 4:17; அப்போஸ்தலர் 3:22,23.* தேவனுடைய ஆவிக்குரிய நித்திய ராஜ்யத்தைப் பற்றி இயேசு பிரசங்கித்தார்; சாலொமோன் ராஜாவாக அரசாண்டதும், வருத்தத்தை ஏற்படுத்துகிறதுமான மாம்சத்துக்குரிய தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி அவர் பிரசங்கிக்கவில்லை. *1 நாளா. 29:23.*

இயேசுவானவர், தேவனிடமிருந்து இஸ்ரவேலருக்கு கொண்டு வந்த செய்தி இந்தப் புத்தகத்திலுள்ள முந்தையப் பாடங்கள் எல்லாவற்றோடும் தொடர்புடையதாக இருக்கின்றது. *யோவான் 7:16-19.* இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிற்பாடு, “அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்.” *லூக்கா 24:44.* இயேசு கிறிஸ்து மகிமைப்படும் வரையிலும் பரிசுத்த ஆவியானவருடைய ஐக்கியத்தை பெற்றுக்கொள்ளும்படி “தேவனுடைய இஸ்ரவேலாகிய” சபைக்கு கிருபை அளிக்கப்படவில்லை. *யோ 7:37-39; கலாத்தியர் 6:16.* இருப்பினும், தேவன் நசரேயனாகிய இயேசுவோடு முழுமையாக இணைந்து செயல்பட்டார். அதோடுகூட பரிசுத்த ஆவியையும் அளவில்லாமல் கொடுத்திருந்தார். பார்க்கவும் *யோ. 3:34; 5:16-23.*

நான்கு சுவிசேஷ புத்தகங்களும், பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட நான்கு கிறிஸ்தவ எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ளன.

*யோவான் 16:12,13.* தனி நபர் பற்றிய விவரிப்புகளை வரிசை முறையில் தேர்ந்தெடுத்து இந்த எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள். தேவன் கொடுத்திருக்கின்ற புத்தகமானது ஒரு கதை வடிவத்தில் அமைந்துள்ள தால், வேதத்தை கற்றுக்கொள்பவர்கள் தனி நபர் பற்றிய விவரிப்புகளை வாசிப்பதற்கு "மூன்று நிலை கொள்கையை" பயன்படுத்துகிறார்கள்; இந்த கொள்கை சென்ற பாடத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இருப்பினும், நான்கு சுவிஷேச புத்தகங்களில் காணப்படுகின்ற போதனைகளையும், மற்ற விவரங்களையும் வாசிப்பதற்கு மற்றொரு கொள்கையை நாம் பயன்படுத்த வேண்டி இருக்கும். இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தேவன் என்ன செய்துகொண்டிருந்தார் என்றும், அவர் நம்மை சிருஷ்டித்ததற்கான நோக்கத்தோடு இது எப்படி சம்பந்தப்பட்டிருக்கிறது என்றும், நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிற வேளையில் இந்த சுவிசேஷ புத்தகங்களைக் குறித்து இரண்டு விஷயங்கள் நம் மனதில் தோன்றுகின்றன: இந்த நான்கு எழுத்தாளர்களுமே இயேசு பரலோகத்திற்கு மறுபடியும் போய் சேர்ந்துவிட்ட பிற்பாடு இந்தப் புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள்; அப்போஸ்தலர் புத்தகத்தில் காணப்படுகின்ற செயல்பாடுகள் ஆரம்பமாகி இருபது ஆண்டுகள் கழித்து இவர்கள் தங்கள் புத்தகங்களில் சிலவற்றை எழுதியிருக்கலாம். அப்போஸ்தலர் புத்தகத்தில் லூக்கா தெரிவிக்கின்ற விவரத்தை மனதில் வைத்துக்கொண்டு இந்தச் சுவிசேஷ புத்தகங்களை நாம் வாசிக்கிறோம் என்பதே இதன் அர்த்தம். சில புதிய ஏற்பாட்டு நிருபங்களும் இந்த சுவிசேஷ புத்தகங்கள் எழுதப்பட்ட காலத்தை சேர்ந்தவையாக இருப்பதினால் அவைகளில் காணப்படும் விவரத்தையும் சந்தர்ப்பப் பொருளாகக் கொண்டு சுவிசேஷ புத்தகங்களை வாசிக்கின்றோம்.

ஆகையால், இயேசு கிறிஸ்து நிஜத்தில் இஸ்ரவேலர் மத்தியில் வாழ்ந்து அவர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து போதனை செய்வதாக நினைத்துக்கொண்டு சுவிசேஷ புத்தகங்களை வாசிப்பது





நாம் முதலில் செய்ய வேண்டியதாகும். நமது முந்தைய பாடங்களில் உள்ள தலைப்புகளோடு தொடர்புபடுத்தியே அவர் தொடர்ந்து பேசி வந்தார். இருந்தபோதிலும், அவர் போதித்தவைகள் கிறிஸ்தவர்களுக்கும் உரியவைகள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர் தீர்க்கதரிசியை விட மேலானவராக இருந்தார்: உலகத்தின் நம்பிக்கையாகிய கிறிஸ்து இவர்தான். இதன் காரணமாக இரண்டு எண்ணங்களை மனதில் கொண்டவர்களாய் சுவிசேஷ புத்தகங்களை நாம் வாசிக்கிறோம்: ஒன்று, இயேசு யூதர்களுக்கு போதனை செய்த அந்த காலத்தினுடைய நிஜமான வரலாற்று அமைப்பு. இரண்டு, நாம் வாசிக்கின்ற சுவிசேஷ புத்தகங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோரால் சபையின் நன்மைக்காக எழுதப்பட்டவையாகும். இயேசு இந்த பூமியில் இஸ்ரவேல் நாட்டில் வாழ்ந்த போது உயிர் வாழ்ந்த ஒரு யூதனுடைய நிலைமையிலிருந்தும் சுவிசேஷ புத்தகங்களை வாசிக்க முடியும். கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த நான்கு சுவிசேஷ புத்தகங்களில் காணப்படும் இயேசுவின் போதனைகளை விளங்கிக்கொள்வதற்கு முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சபையில் நாமும் அங்கத்தினராக இருப்பதுபோல் மனதில் நினைத்துக்கொள்ள வேண்டும்.

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து இயேசு பிரசங்கித்தார். *லூக்கா 4:43.* வேதாகமத்தில் நாம் பார்க்கின்ற ஒரு பகுதியை இங்கே இப்பொழுது கொண்டுவர முடியாவிட்டாலும், தேவனுடைய ஆவிக்குரிய ராஜ்யத்தை கொண்டுவர முடியும். இயேசு யூதர்களுக்கு அறிவித்த போது "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று சொன்னார். *மத்தேயு 4:17.* பரலோகராஜ்யத்திற்கு அப்பாற்பட்டு தேவனைக் குறித்து நாம் சிந்திக்க முடியாது; அதனால் இயேசு கிறிஸ்து அந்த ராஜ்யத்தை மனுக்குலத்துக்கு அருகாமையில் கொண்டுவருவதற்கு முன்பாகவே அது இருந்திருக்கிறது என்று புரிந்துகொள்கிறோம். *1 தீமோத்தேயு 6:13-16.* தேவன் நம்மிடம் எந்த சந்தர்ப்பப் பொருளில்

பேசுகின்றாரோ, அந்த சந்தர்ப்பப் பொருளுக்குரிய அனைத்து வரலாற்றுக் காரியங்களும் நமக்கு விளக்கமாக தெரியாது. நாம் எந்த அளவுக்கு கேட்டு புரிந்துகொள்ளவேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அதற்குப் போதுமான அளவிலான வரலாற்று விஷயங்களை அவர் நமக்காக பதிவு செய்திருக்கின்றார். இருந்தபோதிலும், வேதாகமத்தில் காணப்படுகின்ற சில விவரங்களை வசனத்தில் கொடுக்கப்பட்டிராத வரலாற்றுத் தகவலைக் கொண்டு நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம். இந்தக் கூடுதல் தகவல் உதவிகரமானது தான் என்றாலும், கிறிஸ்தவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி புரிந்துகொள்வதற்கும், அவர் மனுக்குலத்தை படைத்ததற்கான நோக்கங்களை புரிந்துகொள்வதற்கும் இது அவசியமானது அல்ல. தேவன் தமது பிள்ளைகள் புரிந்துகொள்ளமுடியாத விதத்தில் அவர்களிடம் பேசுகிறார் என்று யாராகிலும் உங்களிடம் சொன்னால், அதை நம்பாதீர்கள்.

ஒரு நபர் தாமாக வேதத்தை படித்து கற்றுக்கொள்வதை தடை செய்யும்படியாக கிறிஸ்தவ மத குருமார்களையும், வேத அறிஞர்களையும் சாத்தான் பக்கவாட்டில் நுழையச் செய்து பயன்படுத்தி வருகிறான். உயர்ந்த கல்வி அறிவுள்ள பல கிறிஸ்தவர்களும் கூட சுயமாக வேத வசனங்களை வாசித்து கற்றுக்கொள்வதற்கு பயப்படுகிறார்கள். இயேசு கிறிஸ்துவுக்கு சீஷராக இருக்க விரும்புகின்ற கிறிஸ்தவர்கள் இந்த "மதக் குருமார்களின் பெட்டி" ஆகிய சிறைக்கதவினை உடைத்து வெளியே வர வேண்டும். இயேசுவின் போதனைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்ள மேற்கத்திய சமூகத்தை சேர்ந்தவர்களிடம் மேற்கொண்ட சுருக்கமான புலன் விசாரணை நமக்கு தெரிவிப்பது இது தான் :

"இயேசு கிறிஸ்துவுக்கு சீஷராக இருப்பதற்கு அவருடைய போதனைகளை நம் பிரயோஜனத்திற்காக நாமே சுயமாக வாசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்." பார்க்கவும் *லூக்கா 11:28.* "ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே?





இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?" என்று பவுல் கேட்டது போல இது இருக்கின்றது. *1 கொரி. 1:20.* மனிதருடைய ஞானத்தினால் நாம் தேவனை அறிந்துகொள்ள முடியாது என்பதை 21ஆம் வசனம் சொல்லுகின்றது.

தேவனையும், இயேசு கிறிஸ்துவையும் அறிந்துகொள்வதை நித்திய ஜீவனைப் பற்றிய ஒரு வரையறையாக வேதம் காண்பிக்கிறது. *மத்தேயு 7:23; யோவான் 17:3.* கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனை அறிந்துகொள்ள முயற்சிக்கிறவர்கள் மாத்திரம் அல்ல, அவரை அறிந்துகொள்ள விரும்புகின்றவர்களாகவும் இருக்கின்றோம். பிதாவாகிய தேவன் தம்மை நமக்கு காண்பிப்பதற்காக தமது குமாரனை அனுப்பினதினால் நாம் அவரை மிக நெருக்கமாக அறிந்துகொள்ள முடியும். இயேசுவானவர் மக்களோடு தொடர்பு கொள்ளும் சம்பவங்களை சுவிசேஷ புத்தகங்களில் பார்க்கின்றோம். ஒரு நூற்றுக்கு அதிபதியினுடைய விசுவாசத்தைக் குறித்து கேட்டு ஆச்சரியப்பட்டார் என்று லூக்கா 7:9 வசனத்தில் பார்க்கிறோம். தன் மகனை இழந்திருந்த ஒரு விதவையின் மேல் அவர் மனதுருகுவதையும் நாம் பார்க்கிறோம். நம் நிமித்தம் ராஜாவாகவும், பிரதான ஆசாரியராகவும் இன்று பணியாற்றிக்கொண்டிருக்கின்றவரும் இதே இயேசுகிறிஸ்து தான். மக்களிடத்தில் விசுவாசத்தையோ அல்லது துக்கத்தையோ பார்க்கும்போது அன்று வந்தது போன்ற உணர்வுகள் இன்றும் அவருக்கு உண்டாகின்றன. இதுதான் நமது விசுவாசம், இதனால் தான் நாம் அவரிடம் அன்புகூருகிறோம். சிலுவை மரணத்தின் மூலம் கிடைக்கும் கிருபையினால் நமது பிதாவாகிய தேவனோடு ஐக்கியங்கொள்ளுகின்றோம், பரிசுத்த ஆவியானவருடன் நமக்கு உள்ள ஐக்கியத்தினால் "நிமிடத்திற்கு நிமிடம்" தொடர்ந்து இயேசுகிறிஸ்து வானவருடன் நம்மால் ஐக்கியம் கொள்ள முடிகிறது. ***யோவான் 14:6,7; எபிரெயர் 1:1-3; 2 கொரி. 13:14; 1 யோவான் 3:23,24.***

இப்பாடத்தின் மீதமுள்ள பகுதியில் முந்தைய பாடங்களை சுவிசேஷ புத்தகங்களோடு தொடர்புபடுத்தி நாம் பார்க்கப் போகின்றோம். அதனால், முந்தைய பாடங்களை திரும்பப் பார்ப்பீர்களானால், உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும். இந்தத் தொடர்புகளை கவனத்தில் கொள்ளும்படி உங்களுக்கு ஆலோசனை கூறுகிறோம். பழைய ஏற்பாடு தொடங்கி புதிய ஏற்பாடு வரைக்கும் நீளுகின்ற நமது வேத பாடத்திற்கு பிரயோஜனமாய் இருக்கும்படி இந்தப் பயிற்சியை செய்யப் போகின்றோம். "பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு" என்ற வார்த்தைகள் மனிதர்களால் சேர்க்கப்பட்டவை; பழைய உடன்படிக்கையையும், புதிய உடன்படிக்கை யையும் குறித்து எபிரெய எழுத்தாளன் சொல்லும் கருத்தோடு இவைகள் பொருந்துவதில்லை. *எபிரெயர் 8:7-13.* மல்கியா புத்தகத்திற்கும் மத்தேயு புத்தகத்திற்கும் இடையே 400 ஆண்டுகள் இடைவெளி இருந்தபோதிலும் தேவன் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டுதான் இருந்தார். மனுக்குலத்தை தேவன் ஏன் படைத்தார்? எப்படி படைத்தார்? ஏதேன் தோட்டத்தில் என்ன தவறு நிகழ்ந்தது என்பதைப் பற்றியெல்லாம் வேதம் நமக்கு தெளிவுபடுத்து கின்றது.

இப்புத்தகத்தில் இதே தலைப்பில் இரண்டு பாடங்கள் இடம் பெற்றுள்ளன. நான்கு சுவிசேஷ புத்தகங்களில் ஒரு புத்தகமாய் இருக்கின்ற யோவான் சுவிசேஷ புத்தகத்தை இந்த முதல் பாகத்தில் நாம் கவனிப்போம். ஒத்த அமைப்பு கொண்ட சுவிசேஷ புத்தகங்கள் இந்த புத்தகத்திலுள்ள முந்தைய பாடங்களின் தலைப்புகளோடு எப்படி தொடர்புள்ளவையாக இருக்கின்றன என்பதனை புரிந்துகொள்வதற்காக இந்த சுவிசேஷ புத்தகங்களை நாம் ஆராய்ந்து பார்க்கப் போகின்றோம். மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோர் எழுதிய சுவிசேஷ புத்தகங்கள் தங்களுக்கிடையே பல ஒற்றுமைகளை பெற்றிருப்பதால் இவைகளை ஒத்த அமைப்புக் கொண்ட சுவிசேஷ புத்தகங்கள் என்று குறிப்பிடுகின்றார்கள்.





யோவான் தனது புத்தகத்தில் கொடுத்துள்ள முன்னுரையானது "விசுவாசத்தின் கதவு" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இப்புத்தகத்தின் முதல் மூன்று பாடங்களோடு எப்படி தொடர்பு கொண்டு இருக்கிறது என்று தயவு கூர்ந்து கவனியுங்கள்.

*யோவான் 1:12* தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

*யோவான் 1:17* கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.

**நாம் கற்றுக்கொள்ளும் சத்தியம்**

தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும்படியாகவே எல்லா மனிதர்களும் படைக்கப்பட்டார்கள். உலகத் தோற்றத்திற்கு முன்பாக தேவனுடைய மனதில் இருந்தது இது தான். கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் இயேசு இருந்தார். தேவன் தமது படைப்பைக் குறித்து தம்முடைய மனதில் கொண்டிருந்த நோக்கத்துக்கும், அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இயேசு கிறிஸ்து மூலமாய் அவர் வழங்கிய கிருபைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாம் அறிய வேண்டும். *2 தீமோத்தேயு 1:9.* எல்லா மனிதர்களும் மாம்சத்துக்குரிய பிறப்பின்படி ஆதாமின் வழித் தோன்றல்களாக இருக்கின்றார்கள். *யோவான் 1:13.* தேவனுடனான உடன்படிக்கையை ஆதாம் முறித்துப் போட்டதன் காரணமாக, அவன் பெற்றுக்கொண்ட "நன்மை தீமை பற்றிய அறிவினை" நாமெல்லாருமே, நமது பிறப்பின் மூலம் கிடைக்கின்ற "மனோ சக்தியாக" பெற்றிருக்கின்றோம். இந்த மனோ சக்தியை சரியாக பயன்படுத்த வேண்டிய பொறுப்புள்ள வயதை அடைகின்ற போது நமக்கு கிருபை தேவைப்படுகின்றது.

தேவனுடைய பிள்ளைகளுக்கு ஜீவனுக்குரிய ஒளியாக இயேசு இருக்கின்றார். ஆகையினால், விசுவாசிகளுடைய ஆவிகள் இயேசுவைப் போல உருவாகக்கூடிய இயல்புடன் எப்படி படைக்கப்பட்டிருக்கின்றன என்பதை விவரிக்கக்கூடிய அவரது வாழ்வும் போதனைகளும் விசுவாசிகளுக்கு ஒளியாக இருக்கின்றன. *யோவான் 1:4.* அவருடைய ஜீவனே **எல்லா ஜீவனுடைய ஆவியைப்** பற்றின சத்தியமாய் இருக்கின்றது. அவரே அறிவு ஒளியை உண்டாக்கும் காரணராக இருக்கின்றார். இயேசு கிறிஸ்துவை தங்கள் **ஜீவனுக்குரிய பிரமாணமாக** அறிந்துகொள்ளாத மனிதர்கள் ஆவிக்குரிய வகையில் இறந்தவர்களாக இருக்கின்றனர். இந்த வகையான பிரமாணமானது நம்முடைய வளர்ச்சியை விவரிக்கின்றது. இது நம்மை குற்றஞ்சாட்டி தண்டிப்பதில்லை. ஆவிக்குரிய மரணத்தை அடைந்திருப்பவர்கள். இயேசு கிறிஸ்துவினால் தேவனுடைய பிள்ளைகளாக கிருபையின் மீதும் ஜீவன் மீதும் விசுவாசம் வைக்கிறதன் மூலமாக, மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்கு உட்பட்டிருக்க முடியும். எப்படிப்பட்ட வளர்ச்சியை அடையக் கூடியவர்களாக மனிதர்கள் படைக்கப்பட்டிருக் கிறார்கள் என்பதை விவரிக்கும் வார்த்தையாக இயேசு இருக்கின்றார். அவர் தேவனோடிருந்தார்; ஆயினும் "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." *யோவான் 1:14.* அவர் மனிதர்களின் ஆவிக்குரிய ஜீவனைப் பற்றிய போதகராய் இருக்கிறார். இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தின ஜீவன் நித்திய ஜீவன். தேவன் ஆவியாயிருக்கிறார், ஆவிக்குரிய ஜீவன் நித்தியமானதாய் இருக்கிறது. நமது ஆவிகள் தேவனிடமிருந்து வந்தவைகள். இயேசு ஒரு தேவனுடைய குமாரனுடைய வாழ்வைப் பற்றிய சத்தியத்தை நமக்கு தெரியப்படுத்துவதற்காக "அவரை வெளிப்படுத்தினார்." *யோவான் 1:18.* இந்த சத்தியத்தில் நம்பிக்கை கொண்ட யாவரும் "தேவனுடைய





பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." *யோ. 1:12.*

விசுவாசியாகும்படி தீர்மானிக்கின்ற எல்லா அவிசுவாசிகளும் தேவனுடைய கிருபையை பெற்றுக்கொள்ள முடியும். விசுவாசமும், மனந்திரும்புதலும் உள்ள இருதயத்துடன் இருக்கின்ற விசுவாசிகள் எவர்களோ அவர்களே "தேவனால் பிறந்தவர்கள்." தேவனிடமிருந்து வந்த நமது ஆவியாகிய "உள்ளான மனிதனையே" இது குறிக்கிறது, இந்த உள்ளான மனிதன் தேவனால் "மறுபடியும் பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றது." குழந்தைகளும், சிறுவர்களும் இப்பொழுது தேவனுடன் ஐக்கியம் உள்ளவர்களாக இருக்கிறார்கள், அவர்களுக்குள் குற்ற மனச்சாட்சி உருவாகின்ற வரையிலும் இதே நிலையில் நீடிக்க முடியும். குற்ற மனச்சாட்சிகளை உடைய பெரியவர்கள் மறுபடியும் பிறக்க முடியும். ஒன்றாம் மற்றும் இரண்டாம் பாடங்களோடு யோவான் நம்மை தொடர்புபடுத்துகிறான். இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையால் நமது "உள்ளான மனிதன்", "ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறக்க முடியும்." நமது உள்ளான மனிதனாகிய ஆவி தேவனிடமிருந்து வந்ததாகும். "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்." *யோவான் 3:5,6.* மறுபடியும் பிறக்காத ஒரு மனிதன் மரித்தோரின் உயிர்த்தெழுதல் இடம் பெற்ற பிற்பாடு தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க முடியாது. சிறு பிள்ளைகள் இப்பொழுது தேவனுடைய ராஜ்யத்துக்குள் இருக்கின்றார்கள். *மத்தேயு 18:1-4.* தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து திரும்பவும் பார்க்கும்படியாக இப்புத்தகத்தின் "முன்னுரை" பகுதியை தயவுகூர்ந்து பாருங்கள். கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய சபையாகவும், கிறிஸ்துவின் ராஜ்யமாகவும் இருக்கின்ற தேவனுடைய ராஜ்யத்தைப் பார்க்கும்படியாக உறுதியான "விசுவாச பார்வை" கிறிஸ்தவர்களுக்கு அவசியம். அப்பொழுது தான் இந்தப் பூமியில் வாழ்கின்ற நம்மை, அவருடைய குமாரர்,

குமாரத்திகளென்று சொல்லுகின்ற தேவனுடைய வசனத்தின் அர்த்தத்தை நம்மால் புரிந்துகொள்ள முடியும். *2 கொரிந்தியர் 6:18.*

"அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." *யோவான் 3:16.* உலகிலுள்ள மக்கள் யாவரிடமும் தேவன் ஏன் அன்புகூருகின்றார் என்று கிறிஸ்தவர்களுக்குத் தெரியும். சிலுவையில் அறைந்து கொல்லுகின்ற ரோமானிய முறைப்படி, மிகக் கொடூரமான மரணத்தை அவருடைய குமாரன் அடைவதற்கு முன்பாகவே மனித குலத்திற்காக ஒரு மாபெரும் முதலீட்டை அவர் செய்திருந்தார். எல்லா மக்களுடைய ஆவிகளும் தேவனிடமிருந்து வந்தவைகள் ஆனதால் யாவரும் தேவனைப்போலிருக்கின்றார்கள். ஆகையினால், "தேவர்களா யிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய் உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா?" என்று இயேசு கேள்வி எழுப்பினார். *யோ.10:34.* பார்க்கவும் *சங்கீதம் 82:6,7.* மனிதர்களுக்கு இயற்கையாய் அமைந்துள்ள "தேவனுடைய சாயல்", தங்களுடைய "உள்ளான மனிதர்களின்" முழுமையான அடையாளமாகவேண்டுமென்பதற்காக கிறிஸ்தவர்கள் பாடுபடுகிறார்கள். இவ்வுலகத்திலுள்ள பாவிகள் நித்திய ஜீவனைப் பெற்று தம்முடைய பிள்ளைகளாக வாழ வேண்டும் என்று தேவன் விரும்பியதால், இயேசு தமது மாம்சத்திற்குரிய ஜீவனை தந்தருளினார். *யோவான் 10:10,11.* மூன்றாம், நான்காம் பாடங்களில் இடம் பெற்றுள்ள மனிதர்களுடைய பிரச்சனைகளுக்கெல்லாம் இயேசுகிறிஸ்து மூலமாக தேவன் தந்தருளின கிருபையானது கடைசித்தீர்வாக அமைந்துள்ளதெப்படி என்று யோவான் வெளிப்படுத்தினான்.

பிரதான ஆசாரியனாகிய காய்பா, சொல்லியிருந்தது போலவே இயேசுவினுடைய மரணம் நிகழ்ந்தது, "இயேசு யூத ஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், அந்த ஜனங்களுக்காக மாத்திரமல்ல,





சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்." *யோவான் 11:51,52.* எகிப்திலிருந்து மோசே வெளியே அழைத்து வந்திருந்த தேவனுடைய மக்களுக்கு ஒரு தனிப்பட்ட சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்பதற்காக அவர் இஸ்ரவேல் தேசத்தை உருவாக்கினார், காய்பா இந்த இஸ்ரவேல் தேசத்தைத்தான் குறிப்பிட்டு பேசினான். ஆறாம் பாடம் முதல் பத்தாம் பாடம் வரையிலும் இடம் பெற்றுள்ள தலைப்புகளைப்பற்றி தன்னுடைய வாசகர்கள் அறிந்திருந்தார்கள் என்ற எண்ணத்துடனேயே யோவான் எழுதினான். வேதாகமத்தின் அர்த்தத்தை விளங்கிக்கொள்வதற்காக அமைந்துள்ள ஒரு எளிய விதிமுறையை பின்பற்றுவதற்காகவே, இந்த புத்தகத்தில் இந்த தலைப்புகளெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வேதாகமத்தின் ஒரு புத்தகத்தை நாம் வாசிப்பதற்கு முன்பாக அந்த குறிப்பிட்ட புத்தகத்தை எழுதின எழுத்தாளர் தன்னுடைய வாசகர்கள் அறிந்திருப்பதாக நினைக்கும் விஷயங்கள் எல்லாவற்றையும் நாமும் அறிந்துகொள்ளவேண்டும். இல்லாவிட்டால், அந்த புத்தகத்தை நம்மால் சரியாக புரிந்துகொள்ள முடியாது. சுவிசேஷ புத்தகங்களிலும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திலும் தேவன் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளை கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், பழைய ஏற்பாட்டில் தேவன் மேற்கொண்ட நடவடிக்கைகளை கவனித்துப்பார்க்க வேண்டியதும் அவசியமாயிருக்கின்றது. நமக்கு புரியாத ஒரு காரியத்தின் மீது நம்மால் விசுவாசம் வைக்கமுடியாது.

தேவனுடைய ராஜ்யத்தை நாம் காணும்படியாக மறுபடியும் பிறந்தாகவேண்டும், இருந்தபோதிலும், ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுடைய ஜீவ பிரமாணங்களுக்கேற்ப தன்னுடைய குணத்தையும், செயல்களையும் வெளிப்படுத்தவேண்டியதும் அவசியமாயிருக்கின்றது.

கிறிஸ்தவர்கள் தேவனுக்கு உகந்த வாழ்க்கையை வாழ வேண்டும், ஏனெனில் அதுதான் அவருடைய ராஜ்யத்திற்குரிய கலாச்சாரமாயிருக்கின்றது. "என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்" என்று புதிய உடன்படிக்கையைக்குறித்து சொல்லப்பட்டிருக்கின்றது. *எபிரெயர் 8:10.* இயேசு கிறிஸ்துவை நமது ஜீவனாக எண்ணி அவரைப் பற்றிக் கற்றுக்கொள்கிறபோது தான் தேவனுடைய பிரமாணங்கள் நம்முடைய "மனதிலே வைக்கப்படுகின்ற செயல்" நடைபெறுகின்றது; இந்த ஜீவன் நித்திய ஜீவனாயிருக்கின்றது – தேவனுடன் ஐக்கியமாக வாழுகின்ற ஜீவனாயிருக்கின்றது. இந்த உலக மக்கள் ஜீவன் என்று எதை அழைக்கிறார்களோ, அதை தேவன் மரணம் என்று அழைக்கின்றார். *யோவான் 5:21; 6:53, 63; 8:23,24.* இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையும், போதனைகளும் புதிய உடன்படிக்கைக்குரிய பிரமாணங்களாயிருக்கின்றன என்பதைதான், "அவருக்குள் ஜீவனிருந்தது அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" என்ற வேதவாக்கியம் அர்த்தப்படுத்துகிறது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். இயேசுவானவர் வாழ்ந்துகாட்டிய நீதியிலிருந்து வித்தியாசமான எந்த ஒரு நடவடிக்கையையும் வெளிப்படுத்துகின்ற மக்களுடைய செயல் பாவமாயிருக்கின்றது. *1 யோவான் 3:4.*

இயேசு நிக்கொதேமுவுடன் உரையாடிக்கொண்டிருந்தபோது, முதிர்வயதான ஒருவன் மறுபடியும் எப்படி பிறக்க முடியும் என்ற சத்தியத்தை அவனுக்கு தெரியப்படுத்தினார். அதைக்கேட்டு அவன் அதிர்ச்சியடைந்தான்; இதை யோவான் *யோ. 3:9-21* வசனங்களில் பதிவு செய்திருக்கின்றான். இயேசுவானவர் இந்த பாடத்தை, பாம்புகளால் கடிபட்டு இஸ்ரவேலர்கள் மரணமடைந்த சம்பவத்தோடு தொடர்புபடுத்தினார். *எண்ணாகமம் 21:4-9.* "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே





உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்படவேண்டும்." *யோவான் 3:14-15.* தேவனுடைய அன்பையும், கிருபையையும் பற்றி இயேசு கிறிஸ்து தொடர்ந்து போதித்துவந்தார். "கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய்" இந்த பூமியில் வாசம்பண்ணும்படி அவர் தமது குமாரனை அனுப்பியதற்கான காரணத்தை ஒளியுடனும் சத்தியத்துடனும் இயேசு தொடர்புபடுத்தி பேசினார். *யோவான் 1:14.* மோசேயின் மூலமாக தேவன் நியாயப்பிரமாணத்தைத் தந்தருளினார், இயேசுகிறிஸ்துவின் மூலமாக கிருபையையும், சத்தியத்தையும் தந்தருளினார். *யோவான் 1:17.* நமது உள்ளான மனிதர்களாகிய ஆவிகள் எப்படி தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்டிருக்கின்றன என்ற சத்தியத்தை இயேசு வெளிப்படுத்தினார். அவர் இந்த பூமியில் வாழ்ந்தபோது இதைத்தான் போதித்தார், நிரூபித்தும் காட்டினார். *யோவான் 14:6,7,23,27;17:20-26.* இயேசு தம்மை சிலுவையில் பலியிட்டதனால் உண்டான கிருபையின் மூலமாக கிறிஸ்தவர்கள் "தேவனுடன் சமாதானமாகிறார்கள்", தேவனுடைய பிள்ளைகளாக வளர்ச்சியும் பெறுகிறார்கள். *ரோமர் 4:25-5:1.*

தேவனுடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறதைப்போல, பூமியிலேயும் செய்யப்படவேண்டும் என்பதை இயேசு தம்முடைய உரையாடல்களில் அடிக்கடி சொல்லி வந்தாரென்று யோவான் தெரியப்படுத்துகின்றான். *யோ. 4:34; 5:19, 30, 36; 7:17,28; 8:14-18, 25-29,47; 10:25-30; 12:44-50; 14:7,23,31; 15:8;16:27,28; 17:4-7.* பரிசுத்த வேதாகமத்தில் தேவன் தெரிவிக்கின்ற விவரங்கள் பிதாவாகிய அவரையும் அவர் பிள்ளைகளாயிருக்கும்படி அவர் படைத்த மக்களையும் பற்றி நமக்கு தெரியப்படுத்துகின்றன. மனிதர்கள் தேவனுடைய பிள்ளைகளாக உருவாவதற்காகவே அவர்களுக்கு வாழ்க்கைக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவன் விரும்புகின்ற ஜீவனுள்ள கனி இதுதான். ஆகையால் மனிதர்கள் யாவரும் இதுபோன்ற கனிகளாக இருக்கவேண்டுமென்றே அவர்களை அவர் படைத்திருக்கின்றார். தேவனுடைய பிள்ளையாகாமல் வேறே ஏதோவொன்றாக ஆகும்படி நம்மை படைக்கவில்லை. இந்த இடத்தில் இயேசுவானவர் மறுபடியும் பிறந்த மக்கள் தங்களைப்பற்றி அறிந்துகொள்வதற்கு சத்தியத்தின் மூலம் அவர்களுக்குத் தெளிவு உண்டாக்குகின்றார்.

தேவன் தம்முடைய குமாரன் இயேசுவை இந்த பூமிக்கு அனுப்பி 30 ஆண்டுகளுக்கும் மேலாக யூதர்களுக்கு மத்தியில் வாழச் செய்ததற்கு முக்கியமான காரணம், அவர் தம்மை சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுப்பதுதான் என்று பக்தியுள்ளவர்கள் நம்புகின்ற போது சாத்தானுக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அவர் ஒரு நாள் சிலுவையின் மீதும், மூன்று நாட்கள் கல்லறையிலும் இருந்திருக்கின்றார். தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து அவர் தமது ஜீவனைக்கொடுத்தார் (சுகே (psuche) ஆதாமுக்குள்ளான ஜீவன்) "இந்த ஜீவனால் உண்டான கிருபையே மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கும்படி (ஜோயே (Zoe) கிறிஸ்துவுக்குள்ளான ஜீவன்)" கிறிஸ்தவர்களுக்கு அனுமதியளிக்கின்றது. *யோவான் 5:24; 10:18.* இயேசு இந்த பூமியில் வாழ்ந்த மீதியான காலத்தையெல்லாம், ஜீவன் என்றால் என்ன என்பதை இஸ்ரவேல் மக்களுக்கு காண்பிப்பதற்கும் போதிப்பதற்கும் பயன்படுத்தினார். அவரே தேவனுடைய பிள்ளைகளுக்கு ஜீவப்பிரமாணமாயிருக்கின்றார். யோவான் இயேசுவின் போதனையை அவருடைய இரத்தத்திற்குரிய புதிய உடன்படிக்கையுடன் எப்படி தொடர்புபடுத்துகின்றான் என்பதை காண்பதற்கு பின்வரும் வசனங்கள் நமக்கு உதவிகரமாயிருக்கும். *லூக்கா 22:20; யோ. 19:34,35; 1 யோவான் 5:6-9.* இயேசு ஜீவனாயிருக்கின்றார். அவருடைய வாழ்வு அவருடைய ராஜ்யத்திற்கு உகந்த வாழ்வாயிருக் கின்றது, அந்த ராஜ்யம் கிறிஸ்தவர்களுக்குள் இருக்கின்றது.





*யோவான் 4:14* "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்." கிறிஸ்தவர்களுக்குள் வாசம்பண்ணும்படி பரிசுத்த ஆவியானவர் வரும்வரைக்கும் இது நடைபெறமுடியாமலிருந்தது. இயேசுவின் இரத்தம் கிறிஸ்தவர்களுடைய குற்றங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதால் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசம்பண்ண முடியும். பார்க்கவும் *யோவான் 7:37-39; எபிரெயர் 9:8-14.*

*யோவான் 4:24* "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்."

*யோவான் 6:35* "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்."

*யோவான் 6:63* "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது."

*யோவான் 8:51* "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை." பார்க்கவும் *யோவான் 11:25.*

*யோவான் 9:39* "காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்."

*யோவான் 12: 36* "ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்."

*யோவான் 12:50* "அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன்." பார்க்கவும் *யோவான் 14:31.*

*யோவான் 14:6* "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்." "தேவனுடைய ராஜ்யம்" என்ற தலைப்பிலுள்ள என்னுடைய புத்தகத்தைப் பார்க்கவும், பகுதி 5, பாடம் 12 – ஜீவப்பிரமாணம்.

இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை நாம் கவனிக்கும்பொழுது மற்ற மூன்று சுவிசேஷ எழுத்தாளர்கள் தெரிவிப்பதிலிருந்து அப்போஸ்தலனாகிய யோவான் தெரிவிப்பது வேறுபட்டிருக்கிறது. சபையில் உள்ள தேவனுடைய மக்களுக்கும் உலகத்தாருக்கும் கிறிஸ்தவர்கள் பிரசங்கிக்கிறதும், போதிக்கிறதுமான சுவிசேஷமானது இந்த நான்கு சுவிசேஷ புத்தகங்களிலிருந்தும் தகவல்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. தேவனுடைய ராஜ்யத்திலுள்ள "ஒளியின் பிள்ளைகளுக்கு ஜீவ ஒளியாக" இருக்கிறவர் இயேசுதான் என்பதை யோவான் தன்னுடைய புத்தகத்தில் அதிகமாக வலியுறுத்துவதால், இந்தக் காரணத்துக்காகவே யோவான் சுவிசேஷ புத்தகத்தை முதலாவது நாம் பயன்படுத்துகிறோம். இந்தப் புத்தகத்தின் முதல் மூன்று பாடங்களை புரிந்துகொள்பவர்களுக்கு ஒளி மற்றும் ஜீவன் என்ற வார்த்தைகளின் உண்மையான அர்த்தம் விளங்கும். மற்றவர்களுக்கு அவைகள் மார்க்க சம்பந்தமான நல்ல வார்த்தைகள் என்பதாகத்தான் தெரியும். கிருபையின் அவசியம் தேவனுடைய பிள்ளைகளுக்கு தெரியும். வயதில் பெரியவர்களாக இந்த உலகத்தில் உள்ள எல்லாருமே தேவனுடைய பிள்ளைகளாக விரும்பினால், அவருடைய கிருபையால் அவர்கள் மறுபடியும் பிறப்பது சாத்தியமாகும். அறியாமையினாலோ அல்லது மற்ற காரணங்களாலோ "கிருபையால் இரட்சிக்கப்படுதல்" என்ற போதனையில் பக்தியுள்ள அநேகர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இதனை





நம்புபவர்கள் சரீரத்தில் மரணம் அடைவதற்கும், இயேசு கிறிஸ்துவின் வருகைக்கும், நியாயத்தீர்ப்பு நாளுக்கும் ஆயத்தமாகிவிட்டதாக நினைத்துக்கொள்கிறார்கள். தங்களுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிக்கும்படி இவர்கள் அடிக்கடி தேவனிடம் வேண்டுதல் செய்கிறார்கள். அவர்கள் அறிக்கையிட தவறிய பாவங்களையும், பகிரங்கமாக தெரிவிக்காத பாவங்களையும் தேவன் மன்னிக்கிறார் என்று நம்புவதாக நமக்கு தெரிகிறது. "விசுவாசத்தினால் நீதிமானாக்கும்" கிருபையை இயேசுகிறிஸ்து மூலமாக தேவன் எப்பொழுதுமே அருளுகின்றார். *1 யோவான் 1:5-10.* "கிறிஸ்துவுக்குள்" இருக்கின்ற விசுவாசம் உள்ள கிறிஸ்தவர்களுக்காக வாரத்தின் ஏழு நாட்களும் 24 மணி நேரமும் இந்த உபதேசம் வேலை செய்கிறது.

சில பிரசங்கியார்களும், போதகர்களும் தங்களுடைய மந்தையை பாதுகாத்துக்கொள்வதற்காக "கிருபையால் இரட்சிக்கப்படுதல்" என்ற போதனையை போதிக்கிறார்கள் என்பது உண்மைதான். அவர்கள் தாங்கள் அடைக்கப்பட்டிருக்கின்ற வாழ்க்கைப் பெட்டியின் காரணமாகவோ அல்லது சுய மகிமைக்காகவோ அல்லது பணத்துக்காகவோ இவ்விதமாக பிரசங்கிக்கக்கூடும். *2 கொரிந்தியர் 2:17; பிலிப்பியர் 1:15.* ஏதோ காரணத்துக்காக, "கிருபையால் இரட்சிக்கப்படுதல்" என்ற பெட்டிக்குள் அகப்பட்டு இந்தப் போதனையில் மிகுந்த நம்பிக்கையுள்ளவர்களாக அநேகர் இருக்கலாம். தற்பொழுதைக்கு இது ஒரு நல்ல பெட்டியாகத் தான் தெரிகின்றது. இருப்பினும் நியாயத்தீர்ப்பு நாளிலே கிருபை அருளப்படும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் இருப்பார்களானால், அவர்கள் அதிர்ச்சியடைய நேரிடும். நம்முடைய தனிப்பட்ட நியாயத்தீர்ப்பைக் குறித்து பேசுகின்ற வசனங்கள் நம்முடைய செயல்களைபற்றித்தான் அதிகம் பேசுகின்றனவே தவிர, கிருபையை பற்றி ஒன்றும் பேசுவதில்லை.

அவர்களுடைய "வாழ்க்கைப் பெட்டியை" திறந்து கொள்வதற்கு யோவான் சுவிசேஷ புத்தகத்தை படிப்பது உதவிகரமானதாக இருக்கும். பழைய ஏற்பாட்டு விவரங்களையும், உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனுடைய மனதில் இருந்த காரியத்தையும் பின்னணியாகக்கொண்டு யோவான் புத்தகத்தை படிக்க வேண்டும். "கிருபையால் இரட்சிக்கப்படுதல்" என்ற போதனையின் அடிப்படையில், தங்களுடைய மனதில் பதிந்துவிட்ட எண்ணங்களோடு வேதாகமத்தை தொடர்ந்து வாசிக்கும்படி தீர்மானிப் பவர்கள், நியாயத்தீர்ப்பு நாளையும் "மனுஷன் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்" என்ற நமது மூன்றாம் பாடத்தையும் தொடர்புபடுத்தி, யோவான் சுவிசேஷ புத்தகத்தில் அவன் எழுதியிருக்கின்ற இன்னும் ஒரு வசனத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

*"இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாக வும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். யோ. 5:28,29.*

யோவானும் மற்ற எழுத்தாளர்களும் தாங்கள் எழுதியிருப்பவை களை பழைய ஏற்பாட்டில் தேவன் தெரிவித்துள்ள விவரத்தோடு எப்படியெல்லாம் தொடர்புபடுத்துகிறார்கள் என்பதைப் பற்றி விமர்சிப்பது இந்தப் பாடத்தின் நோக்கமல்ல; கிறிஸ்தவர்கள் இந்த தொடர்புகளை யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு "ஒருமைப்பாட்டுடன் தொடர்ச்சியாக அமைந்துள்ளதும்" தேவன் தெரிவிக்கின்றதுமான விவரத்தை வாசிக்கும்படி அவர்களை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாயிருக்கின்றது. தேவன் தெரிவிக்கின்ற விவரத்தின் பல்வேறு பகுதிகளை சரியாக வாசிக்கும்படியாக ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரை உள்ள புத்தகங்களில் தேவன் தெரிவிக்கின்ற விவரத்தை கிறிஸ்தவர்கள்





அறிந்திருக்க வேண்டியது அவசியம். மனுக்குலத்தை பற்றி தேவன் ஏற்படுத்தியுள்ள திட்டத்தை நிறைவேற்றும்படிக்கு அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று நாம் தொடர்ந்து கவனிக்க வேண்டும். தேவன் முக்கியமானவராக இருக்கிறார். சாத்தான் அவருக்கு எதிராளியாக இருக்கிறான். ஒவ்வொரு மனிதனையும் தம் பிள்ளையாக தம்முடைய ராஜ்யத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதே அவருடைய திட்டம். இப்பாடத்தில் முன்னதாக குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களில், தேவன் நம்மை ஏன் படைத்திருக்கிறார், எப்படி படைத்திருக்கிறார் என்பதை யோவான் தெளிவாக தொடர்புபடுத்தி காண்பிக்கிறான். அதோடுகூட "நன்மை தீமை அறியத்தக்க" வயதை அடைந்த மனிதர்கள் தேவனுடன் அவருடைய ராஜ்யத்தில் வாழும்படியாக "ஜலத்தினாலும், ஆவியினாலும்" எப்படி பிறக்க வேண்டும் என்பதையும் நமக்கு காண்பிக்கின்றான்.

உலகத்தை விட்டு தங்களை தனிமைப்படுத்திக்கொண்டு "மறுபடியும் பிறந்திருக்கிற" கிறிஸ்தவர்களுக்காக இயேசு கிறிஸ்து மூலமாய் வருங்காலத்தில் தேவன் கொடுக்க இருக்கின்ற நன்மையை "முன் கூட்டியே" யூதர்கள் பார்க்கும்படிக்கு இயேசுகிறிஸ்து அவர்களுக்கு உதவி செய்தார். பார்க்கவும் *யோவான் 10:1-18; 15:1-17.* கிறிஸ்துவுக்குள்ளான ஒரு புதிய ராஜ்யத்தை தேவன் ஏற்படுத்தி இருக்கின்றார். *எபேசியர் 1:3;2:6.* இயேசு பிலாத்துவிடம் பேசிய போது இந்தப் புதிய ராஜ்யத்தை மனதில் வைத்தே அவர் பேசியிருக்கக்கூடும், "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப் படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்." *யோவான் 18:36.* "கிறிஸ்துவுக்குள்ளாக" அமைந்துள்ள புதிய ராஜ்யம் இப்போது உலகத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. "கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தையின் முழு அர்த்தத்தையும் கிறிஸ்தவர்கள் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தின் முதல் அதிகாரத்தில் இந்த

வார்த்தையை அநேக முறை பயன்படுத்தி இருக்கிறான். "கிறிஸ்துவுக்குள்" இருப்பதன் பலன்களை பற்றி தெரிந்துகொள்ள இந்த வசனங்களைப் பாருங்கள். *எபேசியர் 2:7; கொலோசெயர் 3:3,4.* தேவன் தமது தீர்க்கதரிசிகளுடைய வாயினாலும், எழுத்தினாலும் மேசியாவினுடைய ஊழியத்தைப் பற்றி தெரிவித்திருந்தது இது தான். *யோவான் 7:40,41.*

தேவன் ஆபிரகாமோடே செய்துகொண்டிருந்த உடன்படிக்கையை சம்பந்தப்படுத்தி இயேசு இவ்விதமாக அறிவித்தார்; "இந்தத் தொழுவத்தி லுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளை யும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்." *யோவான் 10:16.* இந்த அறிவிப்பு ஆறாம் பாடத்தோடு நம்மை தொடர்புபடுத்துகிறது. புறஜாதியாரும் கூட "வாக்குத்தத்தத்தின் பிள்ளை களாய்" இருக்கிறார்கள் என்று நாம் புரிந்துகொள்கிறோம். தேவனுடைய உடன்படிக்கைள் மீது ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக பிற்காலத்தில் இயேசு செய்ய இருந்ததை அவனால் பார்க்க முடிந்தது. தங்களை ஆபிரகாமுடைய பிள்ளைகள் என்று சொல்லி உரிமைப்பாராட்டிக் கொண்ட யூதர்களை இயேசு கடிந்துகொண்டார். "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்." *யோவான் 8:56.* இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை பார்த்து பேசுவதில் இருந்து இந்த உரையாடல் ஆரம்பிக்கிறது; "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்." பார்க்கவும் *யோவான் 8:31-59.* மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர்களின் "வணங்கா கழுத்துள்ள" சுபாவத் துக்கு ஏற்பவே யூதர்கள் பதிலளித்தார்கள்; "நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை." இந்த இஸ்ரவேலர்





ஆபிரகாமுடைய சுபாவத்தை பெற்றிராமல் அவர்களுடைய பிதாவாகிய பிசாசின் சுபாவத்தை பெற்றிருப்பதாக இயேசு சொல்லுகிறார். *யோ. 8:42-44.*

மோசேயைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியாக இயேசு தேவனுக்கு ஊழியம் செய்தார். அவரை ஏற்றுக்கொள்ளாத யூதர்கள் எவர்களோ அவர்கள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளல்ல. "அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள்." *ரோமர் 9:8.* யோவான் இயேசுவின் போதனைகளை அடிக்கடி மோசேயோடு தொடர்புபடுத்தி வந்தான். லேவிய ஆசாரியத்துவ முறைமையின்படி கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் மீது போதுமான நம்பிக்கையில்லாமல் அதற்கு முரண்பாடாக யூதர்கள் நடந்து கொண்டதனால் இயேசு இவ்விதமாக கேள்வி கேட்டார்: "நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கிறானே. அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்." *யோவான் 5:46,47.* "மோசே நியாயப் பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை; நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்." *யோவான் 7:19.* பார்க்கவும் *யோவான் 7:21-24; 8:17; 9:29.* "தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்யாமல், நீதியின்படி தீர்ப்புச் செய்யுங்கள்" என்று ஜனங்களுக்கு அறிவுறுத்துவதே இயேசுவின் நோக்கமாயிருந்தது. *யோவான் 7:24.*

பத்துக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் விக்கிரக ஆராதனைக் காரர்களாக மாறியதால் அவர்களை சிறைப்பிடித்துச் செல்லும்படி

இறுதியாக அசீரியர்களிடம் ஒப்புக்கொடுக்க தேவன் தீர்மானித்தார். *2 இராஜாக்கள் 17:7,8.* அவர்களை இதே பாதையில் பின்தொடர்ந்து யூதாவும் 10 ஆண்டுகளாக பாபிலோனிய சிறை வாசத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. *எரேமியா 2:11-13.* ஒன்பது மற்றும் பத்தாம் பாடங்களை பாருங்கள். தேவனுடைய ஆடுகளை ஒழுங்காக வழி நடத்தவில்லையென்று மேய்ப்பர்கள் மீது அவர் குற்றஞ்சாட்டினார். பார்க்கவும் *ஏசாயா 56:11; எரேமியா 50:6; எசேக்கியேல் 34:2.* உலகெங்கிலுமுள்ள பக்தியுள்ளவர்களால் ஆன குழுக்கள் பலவற்றில் தலைமைப்பண்புடைய நம்பத்தக்க "மேய்ப்பர் வர்க்கம்" கைவிடப்பட்ட நிலைமையில் இருப்பதால், இயேசுவின் போதனைகளில் அடங்கியுள்ள கொள்கைகளை கவனித்து அவைகளின்படி கிறிஸ்தவ தலைமைப் பண்பினை நாம் ஜாக்கிரதையாக நடைமுறைப்படுத்த வேண்டும். மேய்ப்பருக்குரிய இந்த தலைமைப்பண்பின் சிறப்பியல்பினை தன் சுவிசேஷ புத்தகத்துடன் யோவான் தொடர்புபடுத்துகிறான். *யோ. 10:1-18.* தயவுகூர்ந்து இந்த கொள்கைகளை கவனியுங்கள்:

*வசனம் 1* – ஆடுகளுடைய சொந்தக்காரருடைய விருப்பத்திற்கு ஏற்றபடி இந்த மேய்ப்பன் ஆடுகளை நெருங்குகிறான்.

*வசனம் 3* – ஆடுகளின் சொந்தக்காரர் தமது ஆடுகளை மேய்க்கக்கூடிய உரிமையை அந்த மேய்ப்பனுக்கு கொடுத்திருக்கின்றார்.

*வசனம் 2* – ஆடுகளை வழிநடத்த வருகிற மற்ற எல்லாருமே கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்.

*வசனம் 3* – மேய்ப்பனானவன் தன் வசனத்தில் உள்ள ஆடு ஒவ்வொன்றையும் தனிப்பட்ட முறையில் அறிந்து வைத்திருக்கிறான். ஆடுகள் தங்கள் பாதுகாப்புக்காக இந்த மேய்ப்பனை முழுமையாக நம்புகின்றன. தேவனுடைய தேசமாகிய இஸ்ரவேல் அவருடைய





விஷயத்தில் தோல்வி அடைந்து போனதற்கான காரணத்தை இந்தக் கருத்தின் அடிப்படையில் எளிதாகப் புரிந்துகொள்ளலாம். தேவன் தாமே தமது ஜனங்களை மேய்க்க விரும்பினார். ஆனால், அவர்களோ அவர் ராஜாவாக தங்களை ஆளாதபடிக்கு அவரை புறக்கணித்தார்கள். இஸ்ரவேலன் ஒவ்வொருவனுடைய இயல்பான தேவைகளையும் அவர் புரிந்துகொண்டார். பாதுகாப்பு, சமூக அங்கீகாரம், கனம் மற்றும் மகிமை ஆகியவை தம்முடைய பிள்ளைகளுக்கு தேவைப்படும் விதத்தில் அவர்களை படைத்திருந்தார். இவைகளைத் தேடுகின்ற உணர்வு சிறுபிள்ளைகளுக்குள் இருப்பதை நாம் எளிதாக பார்க்க முடியும். தேவன் கொடுத்துள்ள இந்த உணர்வுகள் தான் கற்றுக்கொள்ளும்படியான தூண்டுதல்களை அவர்களுக்குள் அதிகமாக உண்டாக்குகின்றன. ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய இயல்பான தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கு அவசியமானவற்றை கற்றுக்கொள்ள முயற்சித்துக்கொண்டே இருக்கிறது. பெற்றாராகிய நாம், நமது பிள்ளைகளை தேவன் படைத்துள்ள விதத்திற்கு தகுந்தபடி வழிநடத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

ஆடுகள் தங்கள் தேவைகளை திருப்திப்படுத்துகின்ற நல்மேய்ப்பர்களை நம்புவது போல, சிறுபிள்ளைகளும் தங்களுக்குள் தேவன் படைத்திருக்கின்ற தேவைகளை திருப்திப்படுத்துபவர்களை முழுமையாக நம்புகிறார்கள். தேவ மக்களை நடத்துகின்ற உண்மையான தலைவர்கள் "மேய்ப்பனுக்குரிய மனநிலையோடு" தங்கள் பணியை செய்கிறார்கள். இயேசு தாமே "ஆடுகளுக்கு வாசல்" என்று அவரே அறிவிப்பதை *யோவான் 10:7-18* வசனங்களில் நாம் பார்க்கிறோம். இரண்டு ராஜ்யங்களைப் பற்றி புரிந்துகொள்ளுகிற கிறிஸ்தவர்களுக்குத் தான் இயேசு என்ன சொல்ல வருகிறார் என்பது புரியும். உலக ராஜ்யமும்,

“கிறிஸ்துவுக்குள்ளான ராஜ்யமும்” இரு வேறு ராஜ்யங்களாக இருக்கின்றன.

*வசனம் 15*

இயேசு தேவனை அறிந்திருக்கிறார். தேவன் இயேசுவை அறிந்திருக்கிறார். இருவரும் மனுஷனுடைய உள்ளத்தில் இருப்பதை அறிந்திருக்கிறார்கள். *யோவான் 2:25.* ஆகையால், மேய்ப்பனுக்குரிய மனநிலையோடு தேவனுடைய பிள்ளைகளை வழிநடத்துவதற்கு வேண்டிய எல்லா தகுதியும், இயேசுவுக்கு இருக்கின்றது. தேவன் இஸ்ரவேலர்களை எவ்விதமாக வழிநடத்த விரும்பினாரோ அதே விதமாக அதே தன்மையுடன் இவர் சபையை வழிநடத்துகின்றார். இந்தக் கொள்கை எளிமையானது. “மக்களுடைய இயல்பான தேவைகளை உன்னால் புரிந்துகொள்ள முடியாவிட்டால், நல்லதொரு மேய்ப்பனாக நீ இருக்க முடியாது.” ஆனால் இயேசு மிகச் சிறப்பாக இதைச் செய்கின்றார்.

*வசனங்கள் 11,17,18*

தேவன் தமது மக்களுக்காக செய்யாத ஒரு காரியத்தை இயேசு கிறிஸ்து செய்தார். இயேசு அவர்களுடைய பாவங்களுக்காக மரித்தார். இவரே பிரதான மேய்ப்பராக இருக்கின்றார். *1 பேதுரு 5:4.* மக்களை வழிநடத்துபவர்களாக தங்களை முன்நிறுத்தியுள்ள அநேக பிரசங்கியார்களும், கிறிஸ்தவர்களுடைய பாவத்துக்கு இயேசு பலியானதைப் பற்றி அதிகமாக பிரசங்கிக்கிறார்கள். அவருடைய ஆசாரியத்துவத்தில் நமக்கு கிடைத்துள்ள விசேஷித்த நன்மையாக இது இருக்கின்றது; ஆயினும், இயேசுவானவர் நமது ராஜாவாகவும், மேய்ப்பராகவும், நமக்காக ஊழியம் செய்கின்றார் என்ற விஷயத்தை சொல்லத் தவறினால், அது தேவ மக்களுடைய மாபெரும், சக்தியை கொள்ளையடித்துவிட்டதற்கு சமமாகும். இது வருத்தத்திற்குரியது, நாம் **எப்படி** படைக்கப்பட்டிருக்கிறோம் என்றும், **எதற்காக** படைக்கப்பட்டிருக்கிறோம் என்றும், இயேசு அறிந்திருப்பதால், அவர் நமக்கு வேண்டிய





உதவிகளை செய்கின்றார். மனித குலத்துக்கு தெரிவிக்கும்படி இயேசு கொண்டு வந்த சத்தியம் இதுதான். “நன்மை மற்றும் தீமை” அறிந்து கொள்ளும் திறமையும், தீமையை விட்டு நன்மையை செய்ய வேண்டிய பொறுப்புணர்ச்சியும் கிறிஸ்தவர்களுக்கு இருப்பதினால், தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வந்து வாசம்பண்ணுவதற்கு வேண்டிய கிருபையை இயேசு நமக்குத் தருகின்றார்.

சபையின் தலைமைப் பண்பினை குறித்த தெய்வீக ஆலோசனைகளை *யோவான் 13:1-5 மற்றும் 12-17* வரை உள்ள வசனங்களில் பார்க்கிறோம். இயேசு தமது சீஷர்களுடைய கால்களை கழுவினார். எல்லா மார்க்க தலைவர்களுக்கும் இந்த வசனம் நன்றாகத் தெரியும், இருந்தாலும் அநேகர் யாக்கோபையும், யோவானையும் போல மற்ற கிறிஸ்தவர்களை விட மேலான இடத்தில் இருக்கவேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள். *யோவான் 10:35-40.* கனத்தையும், மகிமையையும் தேடுகின்ற உணர்வு இயற்கையிலே நமக்கு உண்டாயிருக்கிறது. இதன் அடிப்படையிலேயே, நாம் இப்படி ஆசைப்படுகிறோம் என்று புரிந்துகொள்ளுகிறோம். ஆனால், கிறிஸ்தவர்கள் நம்பிக்கையுடன் காத்திருக்க விருப்பமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். *யோ. 5:44.* உலகத்தில் இருப்பவர்கள் “முதன்மையான இருக்கையில்” உட்கார விரும்புகின்ற மன நிலையில் தான் இருக்கின்றார்கள். இதை இயேசு கண்டிக்கின்றார்; ஆயினும் பெற்றோர்கள் பொதுவாக “சீலையையும் கழுவும் பாத்திரத்தையும்” தெரிந்துகொள்ளும் தலைமைப் பண்பு உள்ளவர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகள் தங்களுடைய கால்களை கழுவிக்கொள்ளும் அளவிற்கு சக்தியை பெற்றபிறகும், நம்மிடம் உதவி கேட்டால் நாம் நமது பிள்ளைகளுடைய கால்களை சந்தோஷமாக கழுவுகிறோம்.

துரதிர்ஷ்ட வசமாக உலகம் முழுவதிலும் பக்தியுள்ள மக்கள் மீது மேலான அதிகாரம் பெற்றிருப்பவர்கள், இயேசு தம்முடைய

போதனையிலும், செயலிலும், காண்பித்த சபையின் “தலைமைப் பண்பிற்கு” தங்களை அர்ப்பணிக்காமலே இருக்கிறார்கள். மனிதனுடைய ஞானத்தினால் ‘‘முதன்மையான இருக்கையில்’’ இருக்க விரும்பும் குணத்தையே இவர்கள் வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இயேசுவோ, ரோம் நகரத்திலுள்ள போப் ஆண்டவர் தொடங்கி பிரசங்க மேடையில் நின்று கொண்டிருக்கும் பிரசங்கியார் வரைக்கும் எவருக்குமே இப்படிப்பட்ட பெருமை மிக்க குணம் இருப்பதை விரும்புவதே இல்லை. எப்படி பார்த்தாலும் தேவன் தமது மக்களிடம் இருக்க விரும்புகின்ற “தலைமைப் பண்பிற்கு” எதிரானதாகவே இந்தக் குணம் இருக்கின்றது. இக்காலத்தில் சபையில் காணப்படுகின்ற இந்தப் பிரச்சனையைப் பற்றி நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. ஏனெனில், தெய்வீக தலைமைப் பண்பை அடிப்படையாகக் கொண்ட “மேய்ப்பனுக்குரிய மனநிலையை” பற்றி இயேசு பிரசங்கம் பண்ணினதை கேட்ட பல யூதர்கள், “இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்; ஏன் இவனுக்குச் செவி கொடுக்கிறீர்கள்” என்றார்கள்.” *யோவான் 10:20.*

இப்பாடத்தின் பாகம் இரண்டின் தலைப்பாக மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோரின் சுவிசேஷ புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன. முந்தைய பாடங்களின் தலைப்புகளோடு இந்த எழுத்தாளர்கள் தாங்கள் எழுதியவைகளை எப்படி தொடர்புபடுத்துகிறார்கள் என்பதை புரிய வைப்பதே அதன் நோக்கமாகும்.